

# அதனால் ஒவ்வொரு தலைமுறையும் செழிப்படையும்

எதிர்காலத்தைச் சாத்தியமாக்கும் வாக்குறுதியை நிறைவேற்ற நாங்கள் முழுக் கடப்பாடு கொண்டிருக்கிறோம்; சிங்கப்பூரிலும் அதற்கு அப்பாலும் நமது வளர்ச்சிக்கு வழிவகுத்த நமது ஆரம்பகாலத் தலைவர்களைப் போலவே.

நமது உலகம் வேகமாக மாறிவரும் சூழலிலும், ஈடுபாடுமிக்க முதலீட்டாளராகவும், முன்னோக்குள்ள அமைப்பாகவும், நம்பிக்கைக்குரிய பொறுப்பாளராகவும் எங்களது மூன்று கடமைகளிலும் நாங்கள் உறுதியாக வேரூன்றி நிலைத்திருக்கிறோம். நன்றாகச் செய்வதற்கும், அதைச் சரியாகச் செய்வதற்கும், அதன்வழி நல்லன செய்வதற்கும்.

நல் உள்ளத்தோடும் திடமான எண்ணத்தோடும், இன்றைய, நாளையத் தலைமுறைகளிடம் எங்களுக்குள்ள பொறுப்புகளை உணர்ந்து, எதிரே வரும் வாய்ப்புகளைச் சாதகமாக்கிக் கொள்கிறோம்.

நாம் கூட்டாக எதிர்நோக்கும் சவால்களுக்குத் தீர்வுகளை உருவாக்க கட்டமைப்புகளை நிர்மாணித்து விரிவுபடுத்துகிறோம். துணிச்சலோடும் திடநம்பிக்கையோடும் நிர்மாணித்தும், மனித ஆற்றலில் முதலீடு செய்தும், எங்கள் மூலதனத்துடன் ஒரு மாற்றத்தை உண்டாக்குகிறோம்.

எங்கள் முயற்சிகளின் பலனாக, மேம்பட்ட, மேன்மேலும் நீடித்து நிலைக்கவல்ல உலகை நிர்மாணிப்பதே எங்கள் இலக்கு.


அதனால் ஒவ்வொரு தலைமுறையும் செழிப்படையும்

TEMASEK

## ஈடுபாடுமிக்க முதலீட்டாளர்

எங்களது முதலீட்டுப் பட்டியலை நீண்டகால அமைப்பியல் போக்குகளுக்கு ஏற்பத் தொடர்ந்து வடிவமைக்கிறோம். அதே சமயத்தில், பரந்த பொருளியல் சூழலாலும் சந்தை நிகழ்வுகளாலும் எழும் இடர்களையும் வாய்ப்புகளையும் சமாளிக்கிறோம்

### தொடங்கப்பட்டதிலிருந்து நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு




தெமாசெக்கின் முதலீட்டுப் பட்டியல் பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்


● சந்தை மதிப்பு ● பங்குதாரர் பங்குமுதல்
-- குறியிலிருந்து சந்தை வரையிலான அசைவு தவிர்த்த பங்குதாரர் பங்குமுதல்[3]

### தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு

தெமாசெக் கடன் நிலைக் குறிப்பு[4], எங்கள் கடன் தரத்தையும் நிதிநிலை பலத்தையும் எடுத்துக்காட்டுகிறது. எங்கள் முதலீட்டுப் பட்டியலின் மதிப்பில் கடன் விழுக்காடு எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு எங்கள் கடன் தரம் அதிகமாக இருக்கும்

#### ஆதாய ஆற்றல்[5]

மொத்த கடன்
**5%**
நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பில்




● மொத்த கடன்
● நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு

தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்

**5.81%[6]**
**பங்குதாரருக்குரிய ஓர் ஆண்டின் ஆதாயம்**
கடந்த பத்தாண்டுகளில் ஓர் ஆண்டின் ஆதாயம் -9%[5] முதல் 25%[5]

**8%[6]**
**பங்குதாரருக்குரிய 20 ஆண்டின் ஆதாயம்**
தொடங்கப்பட்டதிலிருந்து மொத்த பங்குதாரர் ஆதாயம் 14%[6]

**60%[6,7]-க்கு மேலான முதலீட்டுப் பட்டியல்**
**ஆசியாவில் நிலைநிறுத்தப்பட்டவை**
சிங்கப்பூரிலுள்ள எங்கள் முதலீட்டுப் பட்டியலில் 27%[6,7]

### 2030ஐ நோக்கி எங்களின் மூன்று வளர்ச்சி உத்திகளைக் கட்டமைப்போம்

**முதலீட்டு உத்தி**
நீண்ட காலத்திற்கு நீடித்து நிலைக்கவல்ல ஆதாயத்தை ஈட்டித் தருவோம்

**பங்காளித்துவ உத்தி**
பங்காளித்துவங்களின் மூலம் மூலதனத்தைப் பெருக்குவோம்

**மேம்பாட்டு உத்தி**
ஆற்றல்களை அடையாளம் கண்டு மேம்படுத்துவோம்

1 25 ஜூன் 1974 அன்று தெமாசெக் நிர்மாணிப்பு.
2 நிதியாண்டின் முடிவு 1993-க்கு முன்பாக இருந்த டிசம்பர் 31ம் தேதியிலிருந்து 1994 முதல் மார்ச் 31ம் தேதியாக மாற்றப்பட்டது.
3 31 மார்ச் 2006 முடிவுற்ற நிதியாண்டிலிருந்து, கணக்கியல் தரங்களின்படி 20% துணை முதலீடுகள் சந்தைக்குரியதாகக் குறிக்கப்படவேண்டும்.
4 தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (THPL), அதன் முதலீட்டு ஹோல்டிங் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதி விவரங்களின் அடிப்படையிலானது, ஒருங்கிணைக்கப்பட்ட THPL குழுமம் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் அடிப்படையில் அல்ல. தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு பற்றிய மேல்விவரங்களுக்கு தெமாசெக் ஆய்வு 2022 அறிக்கையில் "அமைப்பு – கடன் தரம்" பகுதியைப் பார்க்கவும்.
5 31 மார்ச் நிலவரப்படி.
6 31 மார்ச் 2022 நிலவரப்படி.
7 அடிப்படை சொத்துகளின் அடிப்படையிலான பங்கீடு.

## முன்னோக்குள்ள அமைப்பு

**நீடித்த நிலைத்தன்மையே மையம்**

நிறுவன அடிப்படையில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகக் **கரியமிலவாயு நடுநிலை** கட்டிக்காக்கப்படுகிறது

**2030ஆம் ஆண்டுக்குள்** முதலீட்டுப் பட்டியலின் நிகர கரியமிலவாயு வெளியேற்றத்தை **2010-ன் அளவைவிடப் பாதியாகக் குறைக்க** குறி வைக்கப்படுகிறது

2050ஆம் ஆண்டுக்குள் கரியமிலவாயு வெளியேற்றம் **நிகர பூஜியமாக இருக்கும் முதலீட்டுப் பட்டியலை அடைவதே** இலக்கு

**பருவநிலை சார்ந்த வாய்ப்புகளில் முதலீடு**
einride | EVERY | H2PRO

**கரியமிலவாயுவற்றத் தீர்வுகளுக்கு உதவி**
Climate Impact X | GenZero | Perennial

**தொழில்நிறுவனங்களில் கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு**
sembcorp | SINGAPORE AIRLINES | SPgroup Empowering the Future of Energy

**மக்களும் ஆற்றல்களும்**
நம் மக்களின் வளர்ச்சிக்காக வளங்களை ஒதுக்கி, எதிர்காலத்தை வரவேற்க ஆயத்தமான ஊழியர் அணியைத் தயார்ப்படுத்துகிறோம்

MAD
**ஒரு மாற்றத்தை உண்டாக்குங்கள் (MAD)**
சமூக நடவடிக்கைகளிலும் நீடித்த நிலைத்தன்மை முனைப்புகளிலும் பங்குபெற ஊழியர்களை ஊக்கப்படுத்துகிறோம்

InclUSivity @ Temasek
**தெமாசெக்கில் அனைத்தும் உள்ளடக்கம்**
பன்மயமான நடைமுறைகளைப் பலப்படுத்தி, உடமை உணர்வை வலுப்படுத்துகிறோம்

TEMASEK TRIPARTITE CONVERSATIONS
**முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள்**
வேகமாக மாறிவரும் உலகைச் சமாளிக்க எங்கள் பங்காளிகள் கூட்டமைப்பைத் தயார்ப்படுத்துகிறோம்

TEMASEK Alumni NETWORK
**தெமாசெக் முன்னாள் அங்கத்தினர் கட்டமைப்பு**
எங்களது முன்னாள் அங்கத்தினர்களுடன் தொடர்பில் இருக்கிறோம்

## நம்பிக்கைக்குரிய பொறுப்பாளர்

**நம்பிக்கைக்குரிய பொறுப்பாளர் என்ற முறையில், நமது கடந்தகாலக் காப்புநிதியைப் பாதுகாக்க வேண்டிய**
**அரசமைப்புப் பொறுப்பு தெமாசெக்கிற்கு உள்ளது**

**நல்லன செய்வதிலும் ஒவ்வொரு தலைமுறையின் நலனுக்காகப் பங்களிப்பதிலும் நாங்கள் கடப்பாடு கொண்டிருக்கிறோம்**

**சமூக மீள்திறனை வலுப்படுத்தி வாழ்க்கை சீர்தூக்கி விடப்படும்**



***ஆங்கர்***
இதுவரை 100க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவளித்திருக்கும் பிரத்யேகப் பராமரிப்புத் திட்டம்

**அனைத்துலகப் பரிமாற்றத்தை வளர்த்து வட்டார ஆற்றல்கள் மேம்படுத்தப்படும்**




***ஆசிய கொடையாண்மை உச்சநிலை மாநாடு 2021***
பருவநிலை செயல்திட்டம், அனைவரையும் உள்ளடக்கிய கல்வி, பெருந்தொற்றுக்கிடையில் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக உலகளாவிய கொடைவள்ளல்கள் இணைக்கப்படுவார்கள்

**நீடித்து நிலைக்கவல்ல உலகை நிலைநாட்டுவதற்காக விஞ்ஞானத்தை முன்னேற்றி பூமி பாதுகாக்கப்படும்**



***சீச்சேஞ்ச்***
பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற புத்தாக்கங்கள் உருவாக்கப்படும்